அ.வ எண் 20/2012 ஐயப்பன் (பிசா1) தேதி:05.12.2022

10 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

எனது அம்மாவை பெற்ற தகப்பனார் அய்யப்பநாயக்கர் எழுதிய உயிலில் எனது தகப்பனார் இராமசுப்புநாயக்கர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தில் 3 வது அயிட்ட சொத்துக்களை என் பெண்மக்கள் லட்சுமியம்மாள், சுப்பம்மாள் மற்றும் ஆவுடைத்தாயம்மாள் ஆகிய மூவரும் எனது ஆயுளுக்கு பின்னர் அடைந்து கொள்ள வேண்டியது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.6 உயில் ஆவணம் பற்றிய எல்லா சங்கதிகளும் எனக்கு தெரியும். மேற்படி உயில் ஆவணத்தில் சாட்சி கையெழுத்திட்ட மற்றொரு சாட்சி குருசாமி நாயக்கர் தற்பொழுது உயிரோடு இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் கண்டுள்ள சரத்துக்களின் படி உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள 1 வது தபசில் 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களையும், வேறு சில சொத்துக்களையும் சுயார்ஜிதமாய் சம்பாதித்து என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது மேற்படி அய்யப்பநாயக்கருக்கு அசல் வழக்கு எண்.122/1934 ல் வழங்கப்பட்ட விற்பனை சான்று என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் முத்துலட்சுமி அம்மாள் என்பவர் மேற்படி அய்யப்பநாயக்கருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் சங்கரநாராயண அய்யர் என்பவர் மேற்படி ஏ.என்.அய்யப்பநாயக்கர் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 சம்மத ஆவணத்தின் படி பிராது 1 மற்றும் 2 தபசில் சொத்துக்களை பொருத்து வாதிகள் வழக்கை மேல்நடத்தவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி உயிலில் கண்ட 1 வது தபசில் 3 வது அயிட்டம் 1 வது சொத்து சர்வே எண்.191/7 பாண்டவர்மங்கலம் கிராமத்தில் உள்ள சொத்து ஜேசுமணி என்பவருக்கு எங்கள் குடும்பத்தை சார்ந்தவர்கள் விற்பனை செய்துவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். பிராது 3 வது தபசில் சொத்திற்கு சம்பந்தம் இல்லாத 13 மற்றும் 14 பிரதிவாதிகள் போலியாக ஆவணம் உற்பத்தி செய்து இந்த வழக்கில் வழக்காடுகிறார்கள்

என்று சொன்னால் சரிதான். மேற்படி 14ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 13ம் பிரதிவாதியின் தகப்பனார் சுபாநாயக்கர் மேற்படி 14 ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக 3ம் தபசில் 5 மற்றும் 6 அயிட்டம் சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 3 வது தபசில் 5 மற்றும் 6 அயிட்டம் சொத்துக்களை 13ம் பிரதிவாதி மேற்படி 14 ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக்கொடுக்க எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரிதான். இந்த சொத்துக்கள் அனைத்தும் எங்கள் குடும்பத்தின் கட்டுப்பாட்டில் மற்றும் அனுபவம், உடைமையில் தான் இருக்கிறது என்றால் சரிதான். எனது தாத்தா அய்யப்பநாயக்கர் எழுதிக்கொடுத்த உயில் நடைமுறைக்கு வந்த காரணத்தினால் தான் நாங்கள் ஜேசுமணி என்பவருக்கு கிரையம் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். 3ம் தபசில் சொத்தில் எனது தாயாருக்கு 1/3 பங்கும் அவருடன் உடன் பிறந்த மற்ற இரண்டு சகோதரிகள் சுப்பம்மாள், லட்சுமியம்மாள் ஆகியோருக்கு தலா 1/3 பங்கும் கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரிதான். 3வது தபசில் 5,6 அயிட்டம் சொத்துக்கள் ஆதியில் காமாட்சி செட்டியார் என்பவருக்கு பாத்தியப்பட்டதாக பொய்யாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி காமாட்சிசெட்டியார் என்பவருக்கு மேற்படி சொத்து பாத்தியப்பட்டதாக காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 14ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லப்படும் அய்யப்பநாயக்கர் என்ற 13ம் பிரதிவாதி உண்மையில் கிடையாது என்றும், அவ்வாறு ஒரு நபர் இல்லை என்றும் அவ்வாறு ஒரு நபர் இருப்பதாக உருவகம் செய்யப்பட்டு ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 13 ஆம் பிரதிவாதி 14ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் எந்தகாலத்திலும் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரிதான். 14ம் பிரதிவாதி மேற்படி 3வது தபசில் 5,6 அயிட்டம் சொத்துக்களை எந்த காலத்திலும் அனுபவித்தது கிடையாது என்றும், 14 ம் பிரதிவாதி பெயரில் எந்த வருவாய் துறை ஆவணங்களும் இல்லை என்று சொன்னால் சரிதான். 14ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் மேற்படி 13ம் பிரதிவாதிக்கு 3வது தபசில் 5,6 அயிட்டம் சொத்துக்களில் எதிர் அனுபவம் மூலம் சிறந்த பாத்தியதை சித்தித்திருந்தது என்று பொய்யாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 13ம் பிரதிவாதிக்கு மேற்படி 3வது தபசில் 5,6 சொத்துக்களில் ஆவணங்கள் மூலமாகவோ அல்லது எதிர்அனுபவம் மூலமாகவோ

எந்தவித உரிமையும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி 14ம் பிரதிவாதி அவர் சொத்தில் உரிமை கோருவது சம்பந்தமாக எதிரிடை கோரிக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3வது தபசில் சொத்தில் எங்கள் குடும்பத்திற்கு 1 பாகமும் ,10 பிரதிவாதிக்கு 1 பாகமும், 11 மற்றும் 12 பிரதிவாதிகளுக்கு 1 பாகமும் கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரிதான். 10 ம் பிரதிவாதிக்கு அவருடைய பெரிய தாயார் லட்சுமியம்மாள் உயில் ஒன்று எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டது என்று சொன்னால் சரிதான். 11,12 பிரதிவாதிகளுக்கு 3ம் தபசில் சொத்தை பொறுத்து அவரது தாயார் சுப்பம்மாள் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணமும் ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டது என்று சொன்னால் சரிதான். 13 ம் பிரதிவாதி 14ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த மோசடி கிரைய ஆவணம் எங்கள் உரிமைகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரிதான்.

திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R. ரத்தினவேல் பாண்டியன்

சார்பு நீதிபதி,

கோவில்பட்டி.